தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை – 600 032
தொலைபேசி 044–22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

**முன்னிலை : மு. மாலிக் பெரோஸ் கான், இ.ஆ.ப (ஓ)**
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

**ஆணை எண்: 86/மா/2023**

**நாள்: 03.05.2023**

திரு. R. மயில்சாமி,
புதுவிளாங்குடி,
மதுரை. – முறையீட்டு மனுதாரர்

உதவி ஆணையர்,
மண்டலம் - 02, மதுரை வடக்கு,
மதுரை மாநகராட்சி,
மதுரை. – எதிர்மனுதாரர்

மதுரை, புதுவிளாங்குடி, செம்பருத்தி நகர், அய்யப்பன் தெரு, மனை எண்.5ல் வசிக்கும் திரு. R. மயில்சாமி என்பவரின் 31.12.2022 நாளிட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் 03.01.2023–ல் பெறப்பட்டு 86/மா/2023 என்ற எண்ணிட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. மேற்கண்ட மனுதாரரது மனு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தால் உரிய விசாரணை மேற்கொள்ளப்பட்டு அதன் அடிப்படையில் பரிசீலனை செய்யப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

**ஆணை**

மதுரை, புதுவிளாங்குடி, செம்பருத்தி நகர், அய்யப்பன் தெரு, மனை எண் 5ல் வசிக்கும் திரு. R. மயில்சாமி என்பவர் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்திற்கு அனுப்பியுள்ள 31.12.2022 நாளிட்ட தனது மனுவில் :

"மேற்கண்ட முகவரியில் சுமார் 22 வருடங்களாக வசித்து வருகிறேன். தற்போது இப்பகுதியில் சுமார் 200 குடும்பங்களுக்கு மேலாக வசித்து வருகிறார்கள். இங்கு வசிக்கும் மக்களை சந்திக்க உறவினர்கள் மற்றும் நண்பர்கள் வந்து செல்லும் பகுதிகளாகும். மேலும் இங்கு வசிக்கும் குடும்பங்களில் சுப நிகழ்ச்சிகளும் நடைபெற்று வருகிறது. இப்பகுதி மக்கள் வந்து செல்லும் போது சரியான முகவரி தெரியாமல் மிகவும் சிரமப்பட்டு வருகிறார்கள். எனவே இப்பகுதியில் "அய்யப்பன் தெரு" என்று மாநகராட்சி பெயர் பலகை வைக்கக் கோரி மதுரை மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களுக்கு இணையதளம் வழியாக (GDP) 30.7.2022 தேதியில் கோரிக்கை மனு அனுப்பி இருந்தேன். எனது மனுவை மாவட்ட ஆட்சியர் அவர்களால் மதுரை மாநகராட்சி ஆணையருக்கு மாற்றம் செய்து நடவடிக்கை எடுக்க அறிவுறுத்தப்பட்டது. ஆனால்

ஐந்து மாதங்களாகியும் இன்னும் நடவடிக்கை எடுக்கவில்லை. இது குறித்து எந்த தகவலும் கடிதம் மூலம் தெரிவிக்கவில்லை.

எனது கோரிக்கை மனு மீது, தமிழக அரசாணை (நிலை), எண்.99, ப (ம) நி.சி.துறை – நாள்: 21.9.2015ன்படி மூன்று தினங்களுக்குள் எனது மனுவிற்கு ஒப்புகை இரசீது வழங்காமலும், முப்பது தினங்களுக்குள் எனது மனு மீது நடவடிக்கை எடுக்க தவறிய அலுவலர்கள் மீது துறை ரீதியான ஒழுங்கு நடவடிக்கை எடுக்கவும், எங்கள் பகுதியில் "அய்யப்பன் தெரு" என்று இரண்டு பெயர் பலகைகள் வைக்க உத்தவிடுமாறு மாண்புமிகு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தை பணிவுடன் மிகத் தாழ்மையுடன் வேண்டிக்கொள்கிறேன்" என தெரிவித்துள்ளார்.

**2. இம்மனுமீது இம்முறைமன்ற கடித நாள் 6.2.2023 வாயிலாக மதுரை மாநகராட்சி ஆணையரிடமிருந்து அறிக்கை கோரப்பட்டது. ஆனால் அறிக்கை பெறப்படவில்லை.**

**3. முறையீட்டு மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் ஆகியோரை 20.04.2023 அன்று விசாரணைக்கு ஆஜராகுமாறு 13.04.2023 நாளிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.**

மனுதாரர் 20.04.2023 அன்று நாகர்கோவில் சர்க்யூட் ஹவுஸில் நடைபெற்ற நேரடி விசாரணையில் ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை சமர்ப்பித்துள்ளார்:

"மதுரை மாநகராட்சி, செம்பருத்தி நகர், புதுவிளாங்குடி பகுதியில் சுமார் 200 குடும்பங்கள் வசித்து வருகின்றனர். இங்கு வசிப்போரின் உறவினர்கள் மற்றும் நண்பர்கள் குடும்ப சுப நிகழ்ச்சிகளில் கலந்து கொள்ள வரும்போது சரியான முகவரி தெரியாமல் மிகவும் சிரமப்பட்டு வருகின்றனர். எனவே, இப்பகுதியில் உள்ள அய்யப்பன் தெருவிற்கான பெயர் பலகை வைக்கக்கோரி 30.07.2022 அன்று மதுரை மாநகராட்சியில் மனு அளிக்கப்பட்டது. ஆனால் மேற்கண்ட மனுவின் மீது எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. எனவே, மேற்கண்ட அய்யப்பன் தெரு மற்றும் பெயர் பலகை வைத்திடாத வேறு தெருக்கள் இருப்பின் அங்கும் பெயர் பலகைகள் வைத்திடவும் பெயர் பலகைகள் வைக்கும்போது தெருவின் திசையை காட்டும் விதமான பெயர் பலகைகளில் அம்புக் குறி பொறித்திடவும் ஆவன செய்யுமாறு இம்முறைமன்ற நடுவத்தைக் கேட்டுக்கொள்கிறேன்" எனத் தெரிவித்துள்ளார்.

4. மதுரை மாநகராட்சி மண்டலம் 2ன் உதவிப் செயற்பொறியாளர் மற்றும் உதவிப் பொறியாளர் ஆகியோர் 20.04.2023 அன்று நேரடி விசாரணையில் ஆஜராகி கீழ்க்கண்டவாறு தங்களது வாக்குமூலத்தை சமர்ப்பித்துள்ளனர்.

"மனுதாரர் தனது மனுவில் தெரிவித்திருந்து போல் மதுரை புதுவிளாங்குடி அய்யப்பன் தெருவில் புதிதாக பெயர் பலகை வைக்கப்பட்டுவிட்டது என்கின்ற விவரத்தை இம்முறை மன்றத்தில் தெரிவித்து அதன் புகைப்பட நகலை இம்முறை மன்றத்தில் சமர்ப்பிக்கிறோம்" எனத் தெரிவித்துள்ளனர்.

**5. முறையீட்டு மனுதாரரின் புகார் மனு மற்றும் வாக்குமூலம், மதுரை மாநகராட்சி உதவிப் செயற்பொறியாளர் (ம) உதவி பொறியாளர் ஆகியோரின் வாக்குமூலம் ஆகியவை இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டன:**

மனுதாரர் அயப்பன் தெரு மற்றும் பல தெருக்களில் வசிக்கும் குடும்பத்தினரை பார்க்க வரும் சொந்தங்கள் மற்றும் நண்பர்கள் தெரு பெயர் பலகை இல்லாததால் மிகவும் சிரமப்படுவதாகவும், அதனால், தங்கள் பகுதியில் உள்ள அய்யப்பன் தெருவிற்கு பெயர் பலகை வைக்குமாறு கோரிக்கை மனு அளித்தும் மதுரை மாநகராட்சி அலுவலர்கள் நடவடிக்கை எடுக்கவில்லை என்று தெரிவித்து புகார் மனு அளித்துள்ளார்.

மதுரை மாநகராட்சியின் உதவி செயற்பொறியாளர் (ம) உதவி பொறியாளர் ஆகியோர், மனுதாரர் கோரியவாறு மதுரை புதுவிளாங்குடியில் அய்யப்பன் தெருவிற்கான பெயர் பலகை வைக்கப்பட்டுவிட்டது என தெரிவித்து அதற்கான புகைப்பட நகல்களை சமர்ப்பித்துள்ளனர்.

மனுதாரர் 30.7.2022 அன்று மனு அளித்தவுடன் மதுரை மாநகராட்சி அலுவலர்கள் உடனடியாக செயல்பட்டு பெயர் பலகை வைத்திருந்தால் பாராட்டலாம். ஆனால், மனு அளித்து அதன் மீது இம்முறைமன்றத்தால் விசாரணைக்கு உத்திரவிடப்பட்ட பின்னர் ஒரு வருட காலம் கடந்த பெயர்பலகை வைத்திருப்பது மதுரை மாநகராட்சி அலுவலர்கள் பொது மக்களின் குறைதீர்க்கும் மனு மீது நடவடிக்கை எடுப்பது இல்லை என்பதும் மெத்தன போக்காக பணிபுரிகிறார்கள் என்பதும் தெளிவாக காட்டுகிறது. இவ்வாறான மெத்தனப்போக்கை இம்முறைமன்றம் வன்மையாக கண்டிக்கிறது. மனுதாரர் மனு குறித்து, (ப (ம)நி.சி. துறையினால் வெளியிடப்பட்ட அரசாணை எண். (Ms) 99 நாள்:21.9.2015ல் தெரிவித்த ஆணையின்படி நடவடிக்கை எடுக்காத சம்மந்தப்பட்ட மதுரை மாநகராட்சி அலுவலர்கள் மீது,

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவ சட்டம் மற்றும் விதிகளில் வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தின்படி குறிப்பாக பிரிவு 7 (ii) (c) பிரிவு -ன்படி

7. The Ombudsman shall perform all or any of the following functions, namely –

(ii) (c) Where the irregularity is due to wilful negligence or dereliction of duty of any officer or employee of the local body, recommend for departmental action by the appropriate authority under the relevant rules.

உரிய துறை சார்ந்த ஒழுங்கு நடவடிக்கை எடுக்குமாறு மதுரை மாநகராட்சி ஆணையருக்கு இம்முறைமன்ற பரிந்துரை செய்து ஆணையிடுகிறது. மேலும், மதுரை மாநகராட்சியில் பெயர் பலகை இல்லாத தெருக்களில் கள பணியாளர்களை கொண்டு ஆய்வு செய்து அங்கு அம்பு குறியிட்ட தெரு பெயர் பலகை வைக்குமாறும், மேலும் ப (ம) நிசி துறையின் அரசாணை எண்.99, நாள்:21.9.2015ல் வெளியிடப்பட்ட ஆணைகளை, பின்பற்றி பொதுமக்களின் குறைதீர்க்கும் மனுக்கள் மீது நடவடிக்கை எடுக்க, மதுரை மாநகராட்சி அலுவலர்களுக்கு உரிய அறிவுரை வழங்குமாறு மதுரை மாநகராட்சி ஆணையருக்கு இம்முறைமன்றம் ஆணையிடுகிறது.

Keeping Street name boards in the Corporation area is a basic service to the citizens by the Local Body and even only when this is brought to this Forum by the aggrieved people, the Madurai Corporation starts acting is something sad to see. The local field officials of the area deserve to be pulled up for their inaction and indifference. The photographs produced by the Corporation do not indicate any arrow marks leading to the "Ayyapan Theru" as the board is located at a Junction point which would confuse and perplex the visitors to this area making the whole exercise, meaningless. The Commissioner Madurai is directed to look into this ambiguity and set right the same by appropriate visual indicators serving the purpose in such street name boards. Similarly the Corporation should fix such name boards throughout the Corporation area wherever such boards are not

erected so far within a time-bound manner to guide the people visiting different places within the Corporation limits.

2023-ஆம் ஆண்டு மே திங்கள் 03-ஆம் நாள் என்னால் கையொப்பமிட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணையிடப்படுகிறது.

//ஒப்பம்//
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

பெறுநர்

1. திரு. R. மயில்சாமி,
மனை எண்.5, அய்யப்பன் தெரு,
செம்பருத்தி நகர்,
புதுவிளாங்குடி, மதுரை – 18.
2. ஆணையர்,
மதுரை மாநகராட்சி,
தல்லாகுளம், மதுரை – 2.
3. உதவி ஆணையர்,
மண்டலம் - 02, மதுரை வடக்கு,
மதுரை மாநகராட்சி,
மதுரை.
4. நகராட்சி நிர்வாக இயக்குநர்,
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
எண்.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
ராஜா அண்ணாமலைபுரம்,
சென்னை – 600 028.
5. இணை இயக்குநர்
ஒருங்கிணைப்பாளர் (Nodal Officer)
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
எண்.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
ராஜா அண்ணாமலைபுரம்,
சென்னை – 600 028.

நகல்

மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச் செயலர்.
இகோ/உதிரிகள்

//ஆணைப்படி/அனுப்பப்படுகிறது//

உதவிப் பதிவாளர்.

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் சென்னை-600 032